
ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

பெருகுக பொன்மழையே



ஆசிரியர் :

தவத்திரு. பாலகவி மீ. கே. வேங்கடராமன்

மணிவிழா நினைவு வெளியீடு

வெளியிடுவோர் :

உயர்திரு. அ. வெங்கடாசலம்

உரிமையாளர் : ஸ்மார்ட் பிரிண்டர்ஸ்

161, கோவிந்தப்ப நாயகன் தெரு, சென்னை-1

இறை நிலை

ஞானிகள் தங்கள் ஆத்மாவைச் சுற்றியுள்ள கோட்டைகளை அழித்து, எல்லாம் இறை மயம் என்று எண்ணி தன் உடலைச் சடமாக வைத்துள்ளனர். அதில் அவர்களுக்கு ஒரு பற்றும் இல்லை. நம் பொருள்களான பேனா முதலியவற்றைப் பிரித்தால் நமக்கு எவ்வாறு துன்பம் இல்லையோ அதுபோல தங்கள் அங்கங்களைச் சடப் பொருளாக எண்ணியுள்ளனர் ஞானிகள். அவர்களின் அங்கங்கள் அகற்றப் பட்டாலும் அவர்களுக்குத் துன்பமில்லை. இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிப்பர். இதுவே இறைநிலை எனப்படும்.

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

பெருகுக பொன்மழையே



ஆசிரியர் :

தவத்திரு. பாலகவி மீ. கே. வேங்கடராமன்

மணிவிழா நினைவு வெளியீடு

வெளியிடுவோர் :

உயர்திரு. அ. வெங்கடாசலம்

உரிமையாளர் : ஸ்பார்ட் பிரிண்டர்ஸ்

ஓம். ஸ்ரீ. இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

முன்னுரை

பூவுலகில் வாழும் உயிர்களுக்கு உயரிய செந்நெறி காட்ட இறைவன் அவ்வப்போது அருட்பெரியார்களை அவதாரம் செய்ய வைக்கின்றான். அம்மகான்கள் வரிசையில் சென்ற நூற்றாண்டில் அவதாரம் செய்து, உலக மக்கள் உய்யும் வண்ணம் எளிய செந்நெறியை 'அருட் சட்டம்' என்ற பெயரால் வகுத்து, வழங்கி, வழிகாட்டி அருள் ஆட்சி செய்து வருபவர் ஸ்ரீ. இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவார்.

அவர் காட்டிய செந்நெறியில் முழுதும் ஈடுபட்டு, குருநாதர் மீது அருட் பாடல்களை தவத்திரு. பாலகவி. மி. கே. வேங்கடராமன் சுவாமிகள் அருளியுள்ளார்கள். இவ்வுலக வாழ்விற்கு அருளுடன் பொருளும் தேவைப் படுகின்றது என்பதை அறிந்த பாலகவி சுவாமிகள் அடியார் வறுமை தீர்ந்து அருள் வாழ்வு வாழ, ''பெருகுக பொன் மழையே'' என்ற தலைப்பில் 51 பாடல்களை இயற்றி யுள்ளார்.

இப்பாடல்களை அச்சாக்கி நூல்வடிவில் வெளியிட்டால் அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்று எண்ணி,

சென்னை-161, கோவிந்தப்ப நாயகன் தெருவில் வாழும் அருட்சட்ட அடியார், 'ஸ்மார்ட் பிரிண்டர்ஸ்' உரிமையாளர் உயர்திரு. A. வெங்கடாசலம் அவர்கள் 19-7-88இல் நடைபெற்ற தம் மணிவிழா நினைவாக வெளியிடுகின்றார்.

மணிவிழா காணும் மணமக்கள்

உயர்திரு. **A வெங்கடாசலம்** அவர்களும்

திருமதி. **A. V. சுலோசனா** அவர்களும்

இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபட்டு, குருநாதர் மீதும், பாலகவி சுவாமிகள் மீதும் அளவற்ற பக்தி கொண்டு, நன்மக்களை ஈன்று, பேரும், புகழும் பெற்று நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ, எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிய வேண்டுகிறேன்.

இந்நூலை தினந்தோறும் பக்தியுடன் ஓதி வழிபட்டால் குருநாதர் பேரருளால் அருள் வளமும், பொருள் வளமும் கொழிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஓதிப் பயன் பெறுமாறு வேண்டுகிறேன்.

வாழ்க குருநாதர்! வாழ்க மணமக்கள்!!

பொருளர்
சற்குரு தாசன் டிரஸ்ட்.

ஆண்டவர் அருள்,
சு. மங்கையர்க்கரசி

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

"பெருகுக பொன் மழையே"

தொடியார் வளையோடு தோன்றும் சிவைபாலன்
படியார் மதுரைநகர்ப் பரிபூரணன் என்னுள்
குடியா யமர்ந்தின்பம் கொடுத்தல் உண்மையெனின்
அடியார் துயரகலப் பெருகுக பொன்மழையே. 1

மடியால் மிடியாற்பல் மக்கள்துய ரெய்தித்
துடியா வணம்சட்டம் சொல்லியரு ளாட்சி
படிமீ தினிதாற்றும் பதிபேரரு ளாலே
அடியார் துயரகலப் பெருகுக பொன்மழையே. 2

கடியார் மலர்சூட்டிக் கசடில்மன தோடும்
துடியாத் தொழுதேத்தும் தூயோர்உள மீதில்
குடியார் குருநாதர் குற்றம்பொறுத் தாரேல்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 3

படியார் படித்தோர்கள் பார்த்தார் பாராதார்
கொடியார் நல்லோர்கள் குழைவோர் குழையாதோர்
படியார் சுகமெய்திப் பண்பாய்வாழ் வாற்ற
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 4

விடியா முனம் மூழ்கி விபுவைப்பணிந் தேத்தி
பொடிபைந் துளவம்சேர் புனிதப்புனல் மாந்தி
அடியா ரெனவாழ்ந்தால் அருளல்உண் மையெனின்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 5

கொடியோன் எனஎன்னைக் கூறிவிலக் காமல்
அடியான் எனஏற்றே அருளல்உண் மையெனின்
படியார் துயரெல்லாம் பற்பம்செய வேண்டும்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 6

பிடியா உமைதோன்றக் களிறாச்சிவ னாரும்
கடியார் புவிமீதிற் கணநாதனை யீன்றே
அடியார் களைப்பேணி அருளல்உண் மையெனின்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 7

செடியார் வினைதீரச் செம்மைமிக மேவ
நெடிதார் பவம்மாள நிமலன்அருள் கூட
வடியா விழிநீரே வழுத்தித்தொழு தேத்தும்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 8

அடிசில் கனிதோசை அப்பம் அவல் வெல்லம்
இடிதேன் தயிர்பால்நெய் இளநீர்பொரி மூலம்
கடலை கரும்புண்ணும் கணநாயகன ருளால்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 9

கடல்தீ வளிபூமி ககனம்கதிர் திங்கள்
உடலார் உயிராகி ஒளிர்முன்னவன் அருளால்
படியார் பலவளமும் பல்கல்உண் மையெனின்
அடியார் துயரகலப் பெருகுகபொன் மழையே. 10

வேதம் ஆகமமும் விரிபல்சாத் திரமும்
ஓதும் பொருள்யாவும் ஒன்றேஎன வோதி
ஏதம் தவிர்சட்டம் இனிதேதந் தாளும்
போதன் பேரருளால் பெருகுகபொன் மழையே. 11

கலிகாலந் தனிலும் கர்த்தன் அருள் நாடின்
நலியாவும் தீரும்நன்மை பெருகு மென
சொலியன் போடடியார் துயர்தீர்த்திதய மிசை
பொலிவோன் பேரருளால் பெருகுகபொன் மழையே. 12

காணும் பொருள்களெலாம் கடவுள்வடிவ மெனின்
பூணும் பணிகளினுள் பொறையேமிக்க தெனின்
சாணொண் நினைநாடும் தமியேன்உள மேவிப்
பேணும் குருவருளால் பெருகுகபொன் மழையே. 13

ஒன்பான் வடிவோடும் ஒளிரும்குரு நாதன்
அன்பார் அடியார்தம் அகமாம்தளி யின்கண்
மின்போல் ஒளிவீசி மிளிரல்உண் மையெனின்
பொன்போன் றவர்வாழ்த்தப் பெருகுகபொன் மழையே. 14

கற்பிற் கடுகளவும் களங்கமறி யாதார்
சொற்பிஞ் ஞகநாமன் சுதனாம்பரி பூர்ணன்
அற்பன் எனதுள்ளும் அமரல்உண் மையெனின்
பொற்புற் றவர்போற்றப் பெருகுகபொன் மழையே. 15

நட்புற் றடியார்க்கே ஞானத்தெளி வீயும்
புட்பத் தொடையோனாம் பூர்ணன்என் சிந்தை
உட்புக் கமுதூட்டி யொளிரல்உண் மையெனின்
பெட்புற் றவர்போற்றப் பெருகுகபொன் மழையே. 16

இன்மக் கடல்வற்றக் காமாதிகள் வேக
நன்மக் களையென்றும் ஞாலத்தவர் போற்ற
உன்மத் தரைப் போன்றும் ஆசான்உறு வனெனின்
புன்மைக் குணம்மாளப் பெருகுகபொன் மழையே. 17

மோகம் தனைநீக்கி மூலக்கனல் மூட்டி
ஆகம் தளியாக்கி ஐம்மாமுக முன்னோன்
சோகம் தவிர்த்தென்பால் சூழ்தல்உண் மையெனின்
போகம் பலதுய்க்கப் பெருகுகபொன் மழையே. 18

பூதம் பலவாகிப் புனிதப்பொரு ளாகி
நாதம் திகழ்மன்றில் நடனம்புரி பூர்ணன்
பேதம் தவிர்த்தென்னுள் பிறங்கல்உண் மையெனின்
போதம் பெற்றுய்யப் பெருகுகபொன் மழையே. 19

ஆலா லந்தனையும் அமுதாச்செய் தருளும்
மேலோர் போற்றிசெயும் விமலன்பரி பூர்ணன்
சாலோ காதிபதம் தருதல்உண் மையெனின்
பூலோ கந்தன்னில் பெருகுகபொன் மழையே. 20

காமா திகள்யாவும் கடிதிற்பொடி யாக
நாமார் நமதிறையார் நண்ணும்வழி யாதென்(று)
ஆமா றருளாசான் அருளல்உண் மையெனின்
பூமா தும்புகழப் பெருகுகபொன் மழையே. 21

யாகா வாரெனினும் நாகாக்கெனு மொழிபோல்
மாகா தல்கொடுநன் மறையாம்ஓ மோதிப்
பாகா யுருகில் இறை படர்தல்உண் மையெனின்
பூகாய் கனியாகிப் பெருகுகபொன் மழையே. 22

பூமேல் வாழ்பிரமன் போற்றும்மறை நான்கும்
பூமேல் மகளிரருள் புனிதையர், வல் லபையும்
தாமே போற்றுகணே சன்றன்திரு வருளால்
பூமேல் அடியரிலில் பெருகுகபொன் மழையே. 23

அன்னம் பணமாடை அகம்ஆவின மாதி
மன்னும் பலதிருவும் மகவும்தரு பகவன்
பொன்னம் பலநடனம் புரியும்பரி பூர்ணன்
பொன்னங் கழலருள்போல் பெருகுகபொன் மழையே. 24

அகமும் புறமுமென அமையும்அரு ளாளன்
சகமும் வானுமெனச் சமையும்தய வாளன்
இகமும் பரமுமருள் இறைபூரணன் அருளைப்
புகழும் அடியரிலில் பெருகுகபொன் மழையே. 25

காற்றும் கனல்புனலும் ககனம்கா சினியும்
சாற்றும் சதுர்மறையும் ஆகமசாத் திரமும்
கூற்றும் இந்திரனும் குபேரனும்ஏ னையரும்
போற்றும் இறையருள்போல் பெருகுகபொன் மழையே. 26

நாரண னார்மருகன் நாகப்புரி நூலன்
காரண மாயமைவோன் கருணையுரு வாளன்
ஏரண வும்மதுரை இனியவைகைக் கரைவாழ்
பூரணன் நல்லருள்போல் பெருகுகபொன் மழையே. 27

எங்கும் சிறிதேனும் இடையறவே நிறைவோன்
துங்கம் விழையடியார் சூழ்ந்தன்பொடு போற்ற
சங்கம் திகழ்மதுரைத் தலமார்பரி பூர்ணன்
பொங்கும் திருவருள்போல் பெருகுகபொன் மழையே. 28

பாவாற் பலபுலவோர் பாடித்தினம் போற்ற
நாவால் அடியார்கள் நாமம்நவின் றேத்த
சேவார் கொடியீசன் சேயாய்வரு பூர்ணன்
பூவார் கழலருள்போல் பெருகுகபொன் மழையே. 29

நாதா என அமரோர் நாளும்நயந் தேத்த
போதா எனஞானப் புனிதர்தினம் போற்ற
தாதா எனஅடியார் சாரத்திகழ் பூர்ணன்
போதார் கழலருள் போல்பெருகுகபொன் மழையே. 30

பற்று கறைநீக்கிப் பரமன்துணை நாடிச்
சற்றும் மறப்பின்றித் தனியன்பாற் போற்றிச்
சுற்றம் எனச்சூழும் தூயோர்சுக மெல்லாம்
பெற்றுப் பொலிவெய்தப் பெருகுகபொன் மழையே. 31

ஒலியொளி சுவைநாற்றம் ஊறெனுமைந் தாகி
அலிபெணொ டாணாகி அளவில்பொருள் களுமாய்க்
குலிசன யன்மாலாய்க் குலவுக ணேசனருள்
பொலிவென அடியரிலில் பெருகுகபொன் மழையே. 32

இருளற உலகின்கண் எங்கணுமொளி எய்த
மருளற மனதின்கண் மகிழ்வுமிகப் பெருக
தெருளுற அடியார்கள் செந்நெறியினி தோம்பிப்
பொருளுடன் அருளெய்தப் பெருகுகபொன் மழையே. 33

உழையமர் கரனுமையைச் சுற்றிஉயர் கனிகொள்
தழைகரம் ஐந்துடையோன் தண்ணருளா லடியார்
பழைய வினைகழியப் பக்தர் அகத் திலுறும்
பிழைக ளெலாம்தவிரப் பெருகுகபொன் மழையே. 34

அன்னையும் அத்தனுமாய் ஆசான்தெய் வமுமாய்
முன்னை வினைகள்தவிர் மூலப்பொரு ளெனவாய்
என்னையும் ஆள்குரவோன் இன்னருளா லடியார்
பின்னைப் பிறவியறப் பெருகுகபொன் மழையே. 35

துரியா தீதமெனும் துகளில்திரு நாட்டில்
அரியா சனமேறி அருளாலரசாளற்(கு)
உரியார் அடியாரென் றோதும்குரு வருளால்
பெரியார் பலர்வாழ்த்தப் பெருகுகபொன் மழையே. 36

சிறுமை யாவுமறச் செய்தேசிக னடியார்
மறுமை இம்மைநலம் மாண்பாய்ப்பெற் றொளிர
வறுமை போயகல வாழ்வில்ஒளி பெருகப்
பொறுமை மிகஅருளாற் பெருகுகபொன் மழையே. 37

சுத்தன் சுகரூபன் சுரர்மா முனிவோர்தம்
கர்த்தன் கருணாளன் மதுரைக்கண நாதன்
அத்தன் அருளாளன் அடியார்அக மேவும்
பித்தம் தெளிவாகப் பெருகுகபொன் மழையே. 38

ஊறெல் லாமகல உண்மைவிளக் கமுற
வீறெல் லாமடைய விழுமியசீ ரடியார்
ஈறில் லாமதுரை ஏரம்பன் அருளால்
பேறெல் லாமெய்தப் பெருகுகபொன் மழையே. 39

கனியும் இரதமுமாய்க் கருணைக்கட லாவோன்
மனிதர் குலமோடு மற்றும்உயிர்க் கெல்லாம்
இனியன் மதுரையில்வாழ் எழிலார்பரி பூர்ணன்
புனிதன் பேரருளால் பெருகுகபொன் மழையே. 40

என்மெயும் ஓர்தளியென் றேற்றமர்பரி பூர்ணன்
பொன்மெயன் ஐந்துகரன் அடியவர்புந் தியினில்
நன்மையெ லாம்வளர ஞானவிளக் குமுறப்
புன்மையெ லாம்அகலப் பெருகுகபொன் மழையே. 41

நந்தியும் பூதகண நாதர்களும் பரவச்
சந்த மிகும் மதுரைத்த லமமர்பூ ரணனை
அந்தியும் சந்தியும்நல் லடியவரும் பரவிப்
புந்திம கிழ்ந்திலகப் பெருகுகபொன் மழையே. 42

எண்ணிய எண்ணியவா றெய்த அருள் புரிவோன்
எண்ணிய லாய் எழுத்தாய் ஏழிசையாய் ஒளிர்வோன்
மண்ணினில் மதுரையமர் பூர்ணன்வழி யடியார்
புண்ணியம் பெய்தலெனப் பெருகுகபொன் மழையே. 43

கவிமலர் மாலைபல கவினுறச்சூட் டிடுவோர்
அவிபுலன் ஐந்துடையோர் அருள்மறையோ திடுவோர்
குவிமன முடையர் தொழும் கூடலிறை யருளால்
புவிமிசை யடியரிலில் பெருகுகபொன் மழையே. 44

ஓதன மாதியெலாம் உயிர்கட்குத விடுவோன்
சோதனை செய்தடியார் தொல்வினைதீர்த் தருள்வோன்
கோதகல் பரிபூர்ணன் கூடலிறை யருளால்
பூதலத் தடியரிலில் பெருகுகபொன் மழையே. 45

கண்ணகல் ஞாலமிசை கருணையெனப் பெருகி
மண்ணவர் விண்ணவரும் வாழ்த்திடவழி யருளும்
அண்ணல் நம்பரிபூர்ணன் அருளால்அடி யர்மனப்
புண்ணொழித் தின்பருளப் பெருகுகபொன் மழையே. 46

கரவறி யாதவருட் கருணைமழை பொழிவோன்
அர ஹர என்பவருள் அமுதமழை பொழிவோன்
சுரர்நரர் தொழுதேத்தும் ஜோதிநம்பரி பூரணப்
புரவலன் பேரருளால் பெருகுகபொன் மழையே. 47

சத்தொடு சித்தாகித் தத்துவம்பல வாகிச்
சத்துவ உருவோடும் தன்கூடலில் அமர்வோன்
நித்தியன் பரிபூர்ணன் நின்மலன்பே ரருளால்
புத்தொளி யுண்டாகப் பெருகுகபொன் மழையே. 48

கரைகடந் தினிதொளிரும் கருணைக்கட லாவோன்
தரையினிற் சட்ட நெறி தந்தருள்பரி பூர்ணன்
உரையுணர் வறியாப்பே ரொளியோன்திரு வருளால்
புரையறும் அடியரிலில் பெருகுகபொன் மழையே. 49

அண்டமெ லாம் அருளால் ஆக்கியளித் தருள்வோன்
அண்டர்கள் மாமுனிவோர்க் கருளமுதூட் டிடுவோன்
மண்டலமேல் மதுரை வாழ்பரிபூர் ணன்உளப்
புண்டரிகன் அருள்போல் பெருகுகபொன் மழையே. 50

ஆரிப் படியருள்வார் என அனைவரும் ஓதப்
பாரிற் பரிபூர்ணன் பத்தரிலத் தருளால்
தாரித் திரியமெலாம் சடுதியில்வில கஅருட்
பூரிப் புண்டாகப் பெருகுகபொன் மழையே. 51

முற்றிற்று

அச்சிட்டோர் : மூவேந்தர் அச்சகம், சென்னை-600 014

குருநாதர் துதி

காணொ ணாக் காட்சி காட்டி யாட்கொள்வாய்
  கரவிலா உளத்தினுள் மிளிர்வாய்
மாண்ருட் செங்கோல் செலுத்தி யெங்கணுமே
  யருளொளி வயங்கிடப் புரிவாய்
ஆணுமாய்ப் பெண்ணாய் அலியுமாய் எவர்க்கும்
  அன்பமு தருத்தி யாள்பவனே
ஆணவா திகளைக் களைந்துபக் குவம்செய்
  அற்புதச் சிற்சுகப் பொருளே.

பாலகவி சுவாமிகள்

ஆண்டவரின் அறக்கட்டளைகள்

1. கற்றதனால் ஆய பயனென்? கற்றபடி நடத்தல் வேண்டும்.

2. தனக்கு வழிகாட்டியாக ஒரு பெரியவரைத் தேர்ந்தெடுத்த பின் அவர் சொல்லும் எதையும் செய்யச் சித்தமாக இருக்க வேண்டும்.

3. மண் முதல் விண்வரை உள்ள பொருள்களைப் படைத்தவன் ஒருவன் உண்டு. எனவே மண்போன்ற பொறுமையும், விண்போன்ற தூய்மையும் கொண்டு திகழ்.

4. மட்டற்ற மகிழ்ச்சி, மட்டற்ற கவலையையும் தரும்.

5. நீயாக எதையும் தேடிக் கொள்ளாதே. வந்ததையும் வெறுத்து விடாதே.

6. உன் சுக துக்கங்களைக் காண்பதைவிட, உன்னைச் சூழ்ந்துள்ளவர்களின் சுகதுக்கங்களில் அக்கரை கொள்.

7. இறைவன் நாம ஜெபம் உடலையும், உள்ளத்தையும் தூய்மை செய்யும் தன்மை வாய்ந்தது.

அச்சிட்டோர் : மூவேந்தர் அச்சகம், சென்னை-14.